விலை ரூ. 5.00 பக்கங்கள் எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI




சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 19 வியாழக்கிழமை (03.01.2002) தொலைபேசி 3378 ஒலி 15

## நோர்வேயின் நடுநிலைமை தமிழ் மக்களின் பாராட்டுக்குரியது

### தலைவர் பிரபா நோர்வே அரசுக்குக் கடிதம்

(வவுனியா)



இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் மீண்டும் அனுசரணையாளராக நோர்வே அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உத்தியோகபூர்வமாக நோர்வே அரசுக்கு வேண்டு கோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவரால் நோர்வே அரசுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் கடந்த இரண்டரை வருடங்களாக நோர்வே அரசு சளைக்காது ஆற்றிய பணிக்கு மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

அனுசரணை வழங்கும் மிகவும் நுட்பமான பணியில் நோர்வே அரசாங்கம் கடைப்பிடித்த பாரபட்சமற்ற நடுநிலை பாராட்டத்தக்கது.

இவ் உன்னதமான அணுகுமுறை தமிழீழ மக்களிடம் மாத்திரமன்றி உலகத்தில் வாழும் தமிழர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரத்தரத் தீர்வும் நிலையான சமாதானமும் ஏற்படும் வகையில் நோர்வே அரசு அனுசரணையாளராக பணிபுரிந்து முரண்பட்டு நிற்கும் இரு சாராருக்கும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்றும் அக்கடிதத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட நான்கு எம்.பிக்கள் உட்பட 2500பேருக்கு ஐ.ஆர்.சி பட்டம்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் மீண்டும் ஈடுபட்டு பொலிஸாரின் கடுங்கண்காணிப்புகளுக்குட்பட்டுள்ள 2500பேரை ஐ.ஆர்.சீக்காரர்களென வகைப் படுத்தப் படவுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். இவர்களுள் மூன்று எம்.பிக்களும், நான்கு மாகாணசபை உறுப்பினர்களும், 43பிர தேசசபை உறுப்பினர்களும் அடங்குவர் என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கண்டி, கம்பஹா, குருநாகல், புத்தளம், அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலைமாவட்டங்களை சேர்ந்தவர்களாவர். (ந)

## அமெரிக்க உதவி இலங்கைக்கும்

அமெரிக்காவிடம் இருந்து இவ்வாண்டு உதவி பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இருப்பதாக அமெரிக்க தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுச்சட்டம் 480என்ற திட்டத்தின் கீழ் இவ்வுதவியை இலங்கை பெறும் என்று அமெரிக்கத் தூதுவர் அல்ஸி வில்ஸ் தெரிவித்துள்ளார். இதன்படி இவ்வாண்டு 63800 மெற்றிக்தொன் கோதுமை மாவை இலங்கை அமெரிக் காவிடம் இருந்து பெறவுள்ளது. (ந.4)

## அரசு - புலிகள் சமாதானப் பேச்சு

# நோர்வேயின் சமாதான தூதுக் குழு

# நாளை பாலசிங்கத்துடன் பேச்சு !

## ஒரு வாரத்திற்குள் கொழும்பு வருவர்

(நமது விஷேட நிருபர்)



**இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்க அனசரணை ஏற்பாட்டானராக செயற்பட முன்வந்துள்ளதாக நோர்வே அமைச்சின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்ஹேசன் தலைமையிலான சமாதானத் தூதுக்குழு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நாளை வெள்ளிக்கிழமை லண்டனில் சந்தித்து பேச்சவார்த்தை நடத்துவுள்ளது.**

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதல்லப் புலிகளுக்கும் இடையில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக அனுசரணை ஏற்பாட்டாளராக முக்கியபங்கினை வகித்துவந்த நோர்வேயின் விசேட தூதுவர் கடந்த வருடம் யூன் மாதத்தில் இருந்து ஜனாதிபதி சந்திரிக்காவினால் ஓரங் கட்டப்பட்ட நிலையில் முறிந்து போயிருந்த சமாதான முயற்சி புதிய அரசு பதவியேற்றதை யடுத்து மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது

இதன் முதற் கட்ட நடவடிக்கையாக நாளை வெள் ளிக்கிழமை நோர்வேயின் விசேட தூதுக்குழு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனைச் சம்பவம் சந்தேக நபர்களை கண்காணிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் சந்தேக நபர்களை குடாநாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடைவிதிக்குமாறு யாழ் நீதிவான் இ.த.விக்னராஜா நெடுந்தீவுகடற்படை கொமாண்டருக்கும், பலாலி படைத்தளபதிக்கும், சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் கட்டளையிட்டுள்ளார். சந்தேக நபர்கள் தீவுப் பகுதியில் தற்போது இல்லை

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் குடாவில் மண்ணெண்ணெய் நேற்று தாராளமாக விநியோகம்

யாழ் குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மண்ணெண்ணை பாவனையாளர்களுக்குத் தாராளமாக விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் கடந்த ஒரு மாத காலத்திற்கு பின் நேற் றைய தினம் எரிபொருள் பெற் றோலியக் கூட்டுத்தாபனத் தினால் விநியோகிக்கப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாடு பிளவுபடாத வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இறைமை ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் நாடு பிளவுபடாத வகையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று கண்டியில் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா நேற்றுக்கண்டிக்கு விஜயம் செய்து தலதாமாளிகைக்கு சென்று வழிபாடு நடத்தினார். அங்கு மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து அவர் களது ஆசியையும் பெற்றுக் கொண்டார்.

இனப்பிரச்சினைக்குரிய பின்னணியை தேடித்திரியாமல் உரிய சமாதானத்தை என்ன விலை கொடுத்தாவது பெற்றுக் கொடுக்கப்போவதாகவும் ரணில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான பொருளாதாரத்தடை உணவு-மருந்துப்பொருட்களுக்கே நீக்கம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பகுதிக்கு, விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை எதிர்வரும் 15ம் திகதி முதல் நீக்கப்படும் என்று, பாதுகாப்பு அமைச்சு நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இதன் மூலம் 15ம் திகதி முதல் வன்னிப்பகுதிக்கு பொருட்களை எடுத்துச்செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றுக்கான தடைகளே முற்றாக நீக்கப் பட்டுள்ளது. ஆனால் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட அளவே டீசல், பெற்றோல், சீமெந்து, இரும்புப்பாளம் என்பவற்றை எடுத்துச்செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பின்வரும் பொருட்களை வன்னிக்குள் எடுத்துச்செல்வதற்கு தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டுள்ளது

(8ஆம் பக்கம் பார்க்க)



# ஏல விற்பனை

யாழ். அரசினர் பொது வைத்தியசாலையில் உபயோகிக்க முடியாததாகத் தீர்மானிக்கப்பட்ட எக்ஸ் கதிர் இயந்திரம் ஸ்ரலஸ் கோப் (SIRESKOPE 5/45) 5/45ஐ 31.01.2002 அன்று காலை 10.00 மணிக்கு பொது ஏலத்தில் விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரும்புவோர் அன்றைய தினம் பணம் செலுத்தி ஏலத்தில் பெற்றுக்கொள்ளலாம். பார்வையிட விரும்புவோர் 28, 29, 30 ஆகிய திகதிகளில் வைத்தியசாலையில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி 3157)

## யாழ். மாநகர சபையின்
# அறிவித்தல்

1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும், அதன் திருத்தங்கள் உட்படவும்.

யாழ். மாநகரசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் கட்டுதல், கட்டடங்களில் மாற்றம் செய்தல் போன்ற சகல அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப் படுத்துவது சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே மாநகர சபையிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து யாழ். மாநகர சபையின் முன் அங்கீகாரம் பெற்ற பின்பே, வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருவதுடன், முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன். இந்த அறிவித்தல் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள், கோயில்கள் யாவற்றுக்கும் பொருந்தும்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

01-01-2002.
(சி 3158)

# மீன்பிடிக்க வழங்கிய அனுமதி மீளப்பெறுகை

(திருநெல்வேலி)

வடமராட்சி சக்கோட்டை தொடக்கம் கற்கோவளம் வரையான கடற்பிராந்தியத்தில் அதிகாலை 3மணி தொடக்கம் காலை 9மணி வரை மீன்பிடிப்பதற்கு வழங்கிய அனுமதியை படையினர் கடந்தமுதலாம் திகதிமுதல் மீளப் பெற்றுள்ளனர்.

மேற்படிபகுதியில் மீன்பிடிக்கும் ஒவ்வொருவரும் படையினருக்கும் இலவசமாக மீன்வழங்கும் பட்சத்தில் அதிகாலை3மணிமுதல் 9மணி வரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும் என்றநிபந்தனையின் பேரில் அதற்கு இணங்கி மீனவர் கடந்த29, 30,31ம் திகதிகளில் தமது தொழிலைச் செய்துவந்தனர்.

இந்தநிலையில் கடந்த முதலாம்திகதிமுதல் இலவசமாக மீன்வழங்க மாட்டோம் என மீனவர்கள் மறுத்ததையடுத்து படையினர் பழைய படி காலை 5மணி முதல் 9மணிவரை மீன்பிடிக்க அனுமதி வழங்கியுள்ளதாய் கூறப்படுகிறது.

இதனைக்கண்டித்து வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மற்றும், இந்துசமயகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோருக்கு கடற்றொழில் தடையை நீக்கி தம்மைச் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிகோரி அவசரகடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர். (உ-43)

## தொலைக்காட்சி பெட்டிவழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்பிரதேசசபைதனது செயற்பாட்டு எல்லைக்குள் இயங்கும் பதிவுசெய்யப்பட்ட 43சனசமூக நிலையங்களுள் 34சனசமூக நிலையங்களுக்கு 13இலட்சம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டிகளை இதுவரை வழங்கியுள்ளதாகவும் மிகுதி 9சனசமூக நிலையங்களுக்கு விரைவில அவற்றைவழங்கவுள்ளதாகவும் மேற்படிசபையின் செயலாளர் செ செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (எ-9)

# இராசி பலன்

3 1 2002
[மார்கழி 19,வியாழன்]
சதுர்த்தி மு.ப 9.43வரை
மகம் மு. இ8.57வரை
ராகுகாலம்-2.00-300
சுபநேரம்-8.00-9.00
அமிர்த சித்தம்

**மேடம**
முயற்சிகைகூடும், தொழில் முயற்சி,தாழ்வுநிலை, பிரயாணஇடையூறு

**இடபம்**
பெரியோர் மனஸ்தாபம் உடல்நலக்குறைவு, கல்விச் சிறப்பு.தனவரவு

**மிதுனம்**
இனியசம்பவம், பொருள் சேர்க்கை,காரிய நன்மை, வாக்குப்பலிதம

**கடகம்**
வாக்குகலகம்,பொருள்விரயம்,காரிய அனுகூலம், கௌரவக்குறைவு

**சிங்கம்**
நல்லமுயற்சி,நண்பர்கள் உதவி,போசனசுகம்,பொருள் சேர்க்கை

**கன்னி**
தனவிரயம், பிரயாண அலைச்சல, முயற்சி தாமதம் அமைதிக் குறைவு.

**துலாம்**
தனலாபம், புகழ்' காரிய அனுகூலம், தெய்வசிந்தை.

**விருட்சிகம்**
ஸ்திர சுகம். அதிகபிரயாசை. உற்சாகம், தொழில் நன்மை

**தனுசு**
பிரயாணம், கட்டுப்படு, முயற்சி தாமதம், உஷ்ண வியாதி,

**மகரம்**
காரியதாமதம், உறவினர் மனஸ்தாபம். உடல்வியாதி, போசனசுகம்

**கும்பம்**
யாகனசுகம், நண்பர்கள் சந்திப்பு. முயற்சி கைகூடும், தனலாபம்,

**மீனம்**

# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள மேற்படி பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்திற்குப் பின்புறமாகவுள்ள மாதர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பாடசாலை விடுகைப் பத்திரம் குடும்ப விபர அட்டை என்பவற்றை தவறாது எடுத்துவருமாறு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (உ)

# மிதிவெடி அகற்றல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஆடியபாத வீதியைச் சேர்ந்த பகுதியில் இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் அண்மையில் மிதிவெடிகளை அகற்றியுள்ளனர்.

இப்பகுதியில் பொது மக்களும் கால்நடைகளும் மிதிவெடிகளினால் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.[எ-19,9]

## பத்திரிகையாளர் பயிற்சிநெறி

(திருநெல்வேலி)

தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று முதல் எதிர்வரும்சனிக்கிழமை வரை யாழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் 3 நாள் பத்திரிகையாளர் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது. (உ-43)

# அ. அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பின்வருவோர்களின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

## நல்லூர் பிரதேச சபை
# மீள் கேள்வி

# மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை

கேள்விப்பத்திரம் விநியோகம் : 07-01-2002 நண்பகல் 12-00 மணிவரை,
கேள்வி ஏற்கப்படும் திகதி ; 09-01-2002 மு.ப. 10-00 மணிவரை,
கேள்விப்பத்திரம் திறக்கப்படும்
திகதி :- 09-01-2002 பி.ப. 2,00 மணி வரை

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

## அறிவித்தல் 1

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (ஜி.எஸ்.ரி தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3000/- | 130000/- |
| 02. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3000/- | 36000/- |

## அறிவித்தல் 2

| | | | |
|---|---|---|---|
| கடை இல. 38 | 500/- | 10000/- | 324000/- |
| கடை இல. 39 | 500/- | 10000/- | 324000/- |

க. மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்.)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை.
திருநெல்வேலி,
01-01-2002.

(சி 3160)

சந்திப்பு. முயற்சி கைகூடும், தனலாபம்.

### மீனம்

தொழில்விருத்தி, தனவரவு ஆரோக்கியம், காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

★ கந்தையா - மகாலிங்கம் (விசேட அ. அட்டை)
★ செல்வகுமார் - சசிலா (தேசிய அ அட்டை)
★ சதானந்தசிவம் - சிவசாந்தினி (தேசிய அ. அட்டை)
★ இராமலிங்கம் - குணரதினம் [விசேட அ. அட்டை)

[(செ)]

## வலம்புரியே என்றும்வாழ்க

ஊரெல்லாம் சுற்றிவரும் நாளிதழே வலம்புரியே
சிரஞ்சீவியாகவே உலவிடுவாய் உனைக்கண்டு
கார்மேகங்கண்டு ஆடும் மயில் போல
களித்தாடுதே என்னுள்ளம் காண்

உலகத்தில் நடப்பவற்றை உன்னுள்ளே வைத்திருப்பாய்
நடுநிலையாய் நீயென்றும் மலர்ந்திடுவாய் என்றென்றும்
புதியதொரு கோணத்தில் புத்தாக்கம் படைத்திடுவாய்
புத்தாண்டில் புதுவடிவைத் தா

காலத்தின் போக்கிலே மாற்றத்தைக் காட்டிடுவாய்
கருத்துடனே செய்திகளைப் படைத்திடுவாய் முந்நாளில்
அச்சுயந்திரத்தில் தவழ்ந்து நீ வந்தாயே
புதுக்கியே உன்னுருவைக் காட்டு

புத்தாண்டிலே பல புதுமைகளைப் புரிந்திடுவாய்
சத்தான விடயங்களைத் தந்திடுவாய் இந்நாளில்
முத்தான உன்வரவால் முகம்மலர்ந்து வாழ்த்துகின்றேன்
வலம்புரியே நீயென்றும் வாழ்க.

குகதாசசர்மா சிவகுமார்
சுன்னாகம்
(அங்.இல: 166)

# ஜனாதிபதி வசமிருந்த அத்தியாவசிய சேவைகள்
# இனிமேல் அமைச்சர் ஜயலத் அதிகாரத்தின் கீழ்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் பல புனர்வாழ்வு மீள்குடியமர்வு அகதிகள் விவகாரங்களுக்கான அமைச்சின் கீழ் நேற்று முன்தினம் முதல் கொண்டு வரப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கையொன்றினை அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; மோதலின் காரணமாக உள்நாட்டில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் வெளியிடங்களில். வாழும் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்கல் நலன்புரி நிலையங்களை பராமரித்தல், மோதலின் காரணமாக பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகளை வழங்கல் ஆகியன எனது அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கான உணவுப் பொருட்களை அனுப்புதல் வன்னிப்பிரதேசங்களுக்கு அனுமதி பெற்ற பொருட்களை அனுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவிபுரிதல், கப்பல் மூலம் பயணிகளை யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்கு உதவிபுரிதல், வன்னிப்பிரதேசங்களுக்கு மக்கள் செல்வதற்கு உதவி புரிதல் ஆகியன அத்தியாவசியசேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதற்கான நிதியை திறைசேரி வழங்கவேண்டுமென அதன் செயலாளரிடம் கோரியுள்ளதாகவும் ஜயலத் ஜெயவர்த்தன அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-4)

## இவ் வருடத்தின் முதல் குழந்தை

(கொழும்பு)

இலங்கையில் இவ் வருடத்தின் முதலாவது குழந்தை கொழும்பு டிசொய்ஸா பெண்கள் வைத்தியசாலையில் பிறந்துள்ளது.

புதுவருடம் ஆரம்பமானதும் நள்ளிரவு 12 மணி 2 நிமிடத்தில் பெண் குழந்தை பிறந்ததாக ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் திருமதி பன்னெல உறுதிப்படுத்தியுள்ளார். (உ-5)

## க. பொ. த. உயர்தரபரீட்சை இரு கட்டங்களாக நடக்கும்
### பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

ஏப்ரல்மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சை இரு கட்டங்களாக நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர். பி அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 1 ஆம்திகதி தொடக்கம் 11 ஆம் திகதிவரை ஒரு கட்டமாகவும், ஏப்ரல் 18 ஆம் திகதி தொடக்கம் மே 2 ஆம் திகதிவரை இரண்டாவது கட்டமாகவும் நடைபெறும்என்று இதுகுறித்து அவர் விளக்கியுள்ளார்.

இப் பரீட்சை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் விடைத்தாள்கள் திருத்தம் ஏப்ரல் 23 ஆம் திகதி தொடக்கம் மே 21 ஆம் திகதிவரை நடைபெறும். கடந்த அரசாங்கம் திட்டமிட்டதற்கமையவே இப்பரீட்சை இரு கட்டங்களாக நடைபெறவிருக்கிறது. இந்நிலையில் புதிய கல்வியமைச்சிலிருந்து இதுவரை எத்தகைய அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை எனினும் பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இனிமேல் பாடசாலைகளின் ஒகஸ்ட்மாத விடுமுறைகள் நீண்டவையாக இருக்க மாட்டாது என்று குறிப்பிட்டார். (எ)

## விகாரமாதேவி பூங்கா மீண்டும்
### மாநகர சபை வசம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்ட விகாரமாதேவி பூங்கா மீண்டும் கொழும்பு மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

நேற்று முன்தினம் விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற வைபவத்தில் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம் எச் முகமட் கொழும்பு மேயர் ஓமர் காமிலிடம் ஒப்படைத்தார், (உ-5)

## சட்டவிரோத வரி அறவீடு உள்துறை அமைச்சருக்கு டக்ளஸ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் கட்சிகள் சிலவரி அறவீடுகள் மேற்கொள்கின்றன. குறிப்பாக வவுனியாவிலிருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு லொறியும் சுமார் 11ஆயிரம் ரூபாவை இவ்வாறு சட்டவிரோத வரியாக செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது

இது கட்டுப்பாடற்ற பகுதியில் வாழும் மக்கள் பொருட்களை அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டிய நிலையை ஏற்படுத்துகின்றது;

எனவே இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் கே.என் டக்ளஸ் தேவானந்தா உள்துறைஅமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிடுகையில், கட்சிகள் மேற்கொள்ளும் இத்தகைய வரி அறவீடுகள் குறித்து அண்மையில் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் பகிரங்கமாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இந்த வரித் தொகையை வன்னி வாழ் மக்களே சுமக்க வேண்டியவர்களாக உள்ளனர். எனவே சட்டவிரோத வரிஅறவீடுகளைத் தவிர்க்கும் வகையில் இவ் விடயத்தில் தாங்கள் உடனடியாக நேரடிக் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

## பொதுமக்கள் மீது தாக்குதல்
## தாழ்வுபாடு பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கடந்த ஞாயிறன்று இரவு நடைபெற்ற ஒளி விழாவில் கலந்துகொண்டோர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக இப்பகுதிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஒளிவிழா இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு சென்ற பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி ஈற்றில் பொலிஸார் பொதுமக்களைக் கண்டபாட்டில் தாக்கியுள்ளனர்.

இதுதொடர்பாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் ரெலோ அமைப்பினர் மன்னார் பிரதம பொலிஸ் அதிகாரியின் கவனத்தின் கீழ் கொண்டு வந்ததையடுத்தே இந்தஇடமாற்றம் இடம்பெற்றுள்ளது. (உ)

## இசைவிருந்து

(காரைநகர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடமும் இந்துசமயப் பேரவையும் இணைந்து நடத்தும் பூம்பூத்த தமிழகக் கலைஞர்களின் இசைவிருந்தும் பாராட்டு வைபவமும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைவளாகத்தில் சாகித்திய இசைப்பேரரசு நவி.மு. நவரத்தினம் தலைமையில் இன்று மு.ப. 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ-226)

## வெடிகொழுத்திய 13 பேர் படுகாயம்

(கொழும்பு)

நத்தார் தினத்தன்றும் அதற்கு அடுத்த நாளும் வெடி கொழுத்திய கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 13 பேர் பலத்த எரிகாயங்களுடன் ராகம மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-5)

## முஸ்லிம்கள் படுகொலை
## நீதிமன்றக் குழு மூலம் விசாரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கண்டியில் 10 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நீதிமன்ற குழு ஒன்றின் மூலம் மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பான சி ஐ டி பொலிஸாரின் விசாரணைகள் அனைத்தும் முடிந்த பின்னர் நீதிமன்ற விசாரணைகள் குறித்துஇறுதி முடிவு எடுக்கப்படுமென சட்டமாதிபர் திணைக்களத்தின்பிரதி சொலிசிற்றர்ஜெனரல் ஜேம்ஸ் குணரட்ண தெரிவித்துள்ளார். (உ-5)

## வசந்த மண்டபம் புனரமைப்பு

[காரைநகர்]

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வசந்த மண்டபப் புனரமைப்பும், ஆலய வீதி திருத்தமும் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. [உ-226]

## தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கணக்காய்வு பரீட்சகர் சேவைதரம் II வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எதிர் வரும் 5,6 ஆம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-19)

## ஆப்கானுக்கு புதுவாழ்வு இலங்கைக்கு புதுநம்பிக்கை
### அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

புதுவருட ஆரம்பத்துடன் சமாதானத்தை அடைவதற்கு கிடைத்துள்ள வாய்ப்பை இலங்கை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இரத்தக்களரியை நிறுத்தி சமாதான யுகத்தினுள் இலங்கை புகவேண்டும். அமைதி, சமாதானம் செல்வம் அனைத்தும் கிடைக்கப் பெறவேண்டும். என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதுவர் ஆஷ்லி வில்ஸ் புத்தாண்டை முன்னிட்டுவிடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

''ஆப்கானியருக்கு புது வாழ்வு இலங்கையருக்கு புது நம்பிக்கை'' என்று தலையங்கமிட்டு விடுக்கப்பட்ட மேற்படி செய்தியில், ஆப்கான மக்கள் இன்று மகிழ்ச்சியுடன் வாழவழிபிறந்திருக்கிறது. இலங்கையில் சமாதானம், நல்லிணக்கத்திற்கான வாய்ப்புக்கள நன்கு தெரிகின்றன என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## பொங்கலுக்கு முன்பாக
## மலையகப் பகுதி வீதித் தடைகள் அகற்றப்படும்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் அமைந்துள்ள வீதித்தடைகள் மற்றும் சோதனைச்சாவடிகள் தைப்பொங்கல் தினத்திற்கு முன்னதாக அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி. சந்திரசேகரன் பிரதமர்ரணில்விக்கிரமசிங்காவுடன் நேரில் சென்று இது விடயம் தொடர்பாக எடுத்துக்கூறியதன் பிரகாரம் இம் முடிவு எட்டப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு மாநகரில் உள்ள வீதித்தடைகள் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதையடுத்து, வடக்கு கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப்பகுதிகளில் இருந்தும் இவற்றை அகற்ற வேண்டும் எனும் கோரிக்கை வலுப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது; (உ)

## உள்ளூராட்சி தேர்தலிலும் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டி?

(கொழும்பு)

நாடுபூராகவும் எதிர்வரும் மார்சமாதம் நடைபெறஇருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துஇருப்பதாக தெரியவருகிறது.

ஐ தே.கட்சியினர், உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிட விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கனவே கோரியுள்ளது

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி எம். ஜயவர்த்தனாபொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வேட்பாளர் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கும்படி அறிவித்துள்ளார்.

அநேக தமிழ்க்கட்சிகளும் பொதுவான அமைப்பின் கீழ் போட்டியிடுவதுதொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ பி ஆர் எல் எவ் என்பன இது தொடர்பாக ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் ஒரே நாளில் நடைபெறுவதுடன், நியமனப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வதற்கான விடரங்களை தேர்தல் ஆணையாளர் விரைவில் அறிவிக்கவுள்ளார். (உ-8)

## இலங்கை ச. செ. சங்கத்திற்கு
## 7 இலட்சம் யூரோ நாணயம் ஐரோ. ஒன்றியம் வழங்கியது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது மனிதாபிமான நிதிப் பிரிவிலிருந்து 7 இலட்சம் யூரோ நாணயத்தை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் ஐ. சி. ஆர். சி. யின் நோயாளர் கப்பல் சேவையில் பயணம் செய்யும் யாழ்ப்பாண நோயாளர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8,5)

மறைந்தார் மாண்பு

# ஆசிரியப் பணியோடு ஆலயத் தொண்டும் ஆர்வமுடன் செய்த 'முத்தையா சதானந்தன்'

> மனம் வாக்குப் பார்வைக்கு எட்டா நின்று
> மாறாது நகராது நிலைத்தே யெங்குந்
> தணப்பின்றி நிறைந்ததாய் மாறா நிற்கும்
> தன்மைத்தாம் பிரம்மத்தை உபாசிப் போர்கள்
> சமபுத்தி தன்னையே உடையோ ராகிச்
> சஞ்சலத்திற் சஞ்சரிக்கும் புலன்வென் றோராய்
> அனைத்துயிரின் நன்மையிலே ஈடுபட்ட
> அவர்வந்து என்னையே அடைகின்றாரே
>
> - ஸ்ரீமத்பகவத் கீதை: 12:3

**தமிழ்ப் பேராசான்**

வடமராட்சி; கற்கோவளம்; வங்கக்கடலின் அரவணைப்பில்உள்ளபுராதனகிராமம் பெற்றெடுத்த தவப்புதல்வர் முத்தையா சதானந்தன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று ஆசிரியராகப் பணிபுரிந்தவர். 1971-84 ஆம் ஆண்டுவரையா/பருஹாட்லிக் கல்லூரியின் புகழ்பூத்த தமிழ்ப் பேராசான், ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலயத்தின் அறங்காவலர் சபைஉறுப்பினராகவும், மகாசபையின் உறுப்பினராகவும், பொதுச் செயலாளராகவும், எழுதுநராகவும், ஓதுவாராகவுமிருந்து அருட்பணிபுரிந்தவர். வல்லிபுர ஆலய மஹோற்சவப் பன்னிரண்டாம்உற்சவ உபயகாரர் திருவிழாக்காலங்களிலும்- விசேட நிகழ்ச்சிகளின் போதும் தம்மூர்ச்சிறுவர்- சிறுமியர்க்குப் பாடங்களும்- நடிப்புங் கற்பித்து வடக்கு வீதியில் சுவாமி முன்னிலையில் பாடவும் நடிக்கவுஞ் செய்வித்துப் பலரின் பாராட்டுக்களைப் பெற்ற பெருமைக்குரியவர். நாலாயிரத்திவ்வியப் பிரபந்தப் பாடல்கள், தேவாரம், திருவாசகம், புராணங்கள் என்பவற்றைப் பண்ணுடன் இனிமையாகப்பாடி அனைவரதும் உள்ளங்குளிர்க்கச் செய்தவர். பூசைவேளைகளில் ஓதுவாராக இருந்து உளமுருகிப் பாடியவர்.

**வல்லிபுரஆழ்வார்ப்பணி**

மார்கழி மாதம் முழுவதும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வைகறைப் பொழுதில் உளமுருகப்பாடிப் பக்தகோடிகளின் உளமுருகச் செய்தவர். இவரால் இவர் பிறந்த ஊரான கற்கோவளமும் பெருமை பெற்றது; 7ம், 12ம், 16ந் திருவிழாக்களின் உபயகாரர் அவ்வூரவர்களே. சுவாமியைத் தூக்கிவீதிவலம் வருந்தொண்டும் இவர்களுக்குரியதே; ஆதியில் இவர்களின் முன்னோர்களே சக்கர ஆழ்வார்ப் பெருமானைச் சமுத்திரக் கரையிலிருந்து பல்லக்கில்லவல்லி என்னும் அம்மையாருடன் கொண்டு வந்து இன்று ஆலயமிருக்கும் இடத்தில் சேர்த்தவர்கள்.

தோற்றம் 1923 08 20-
இறைவனடி 2001.11.23

அமரரின் ஆன்மா நற்கதி பெற்றுய்ய எல்லாம்வல்ல வல்லிபுர ஆழ்வார்ப் பெருமானை இறைஞ்சி அமைகிறேன் ஓம் சாந்தி.

கவிஞர்

**துன்னையூர் சி. செல்லமுத்து**

---

# மாமனிதர் குமார் நினைவு நாள் ஏற்பாடுகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர்தியாகி மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 2வது ஞாபகார்த்த நினைவஞ்சலி நிகழ்வுகள் அவரது நினைவு தினமான 5ஆம் திகதியன்று நடைபெறவுள்ளதால், நிகழ்வுகள் தொடர்பாக மாமனிதர் குமாரின் ஞாபகார்த்தக் குழுவின் ஆலோசனைக் கூட்டம்கடந்தஞாயிற்றுக்கிழமை முன்னாள் மாநகர சபை ஆணையாளரும் காங்கிரஸ் முக்கியஸ்தருமான சி.வி.கே சிவஞானம்தலைமையில்நடைபெற்றது. இதில் தமிழ்க் காங்கிரஸின்முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில 5ஆம் திகதியன்று மாலை 2மணியளவில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்படம் நல்லூரில் இருந்து திவ்ய ஜீவனமண்டபம் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவஞ்சலி நிகழ்வுகள் மாமனிதர் கலைஞானி அ. செல்வரத்தினத்துக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவரின அருமபொருள சேகரிப்பை பேணிப் பாதுகாத்தல்மற்றும் கலைச் சேவை தொடர்பாகவும அங்கத்தவர் ஒருவரால் அஞ்சலியுரையும் நிகழ்த்தப் பட்டது.

(உ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆசிரியா ச. நவரெத்தினராசவேலின் அறிமுகவுரையைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மெய்யியல்த்துறை முதுநிலை விரிவுரையாளர்

காணாமற் போனோர் பற்றிய

# விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்இருந்து 1996, 1997ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வருவோர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களின் உறவினர்கள் சாட்சிகள மற்றும் அப்பகுதி கிராமசேவகர்களை யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

விசாரணைக்காக வரும்உறவினர்களை காணாமற் போனோர் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டுப பிரதிமற்றும்பொலிஸ்முறைப்பாடு வாக்காளர் பிரித்தெடுப்பு இலக்கம் மரண அத்தாட்சிப பத்திரம் என்பவற்றை எடுத்து வருமாறு விசாரணையினை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர் மேலும் அறிவித்துள்ளனர்.

- சின்னையா இராமசாமி
- சந்திரநயனி சண்முகநாதன, லலிதா சண்முகநாதன்
  கோ. இல. பி.ஐ:- 406)
  25 புருடிலேன் அரியாலை
  சாட்சி:-
  ஜே/ 92 கிராம சேவகர்
- நேபன் அன்பாலன்
  (கோ. இல. பி. ஐ:- 435)
  சோரன் பற்று பளை
  சாட்சிகள்:-
  வசந்தி நெயின்தேவகுமார்
  ஜே/79 கிராம சேவகர்
- சந்திர சேகரன்
  லோகேஸ் வரன்
  (கோ. இல. பி ஐ- 206)
  கைதடி கிழக்கு
  சாட்சி:-
  செ சந்திரசேகரம்
  ஜே/ 289 கிராம சேவகர்
- பாலன் செல்ரசா
  (கோ. இல. பி.ஐ- 475)
  மட்டுவில் கிழக்கு

(உ-10)

## கள்வர் கைவரிசை

(காரைநகர்)

புத்தாண்டை ஒட்டி ஊரடங்கு தளர்த்தப்பட்டமையைச் சாதகமாகப் பயன்படுத்திய கள்வர் குழு, யாழ்ப்பாணம் கே.கே எஸ். வீதியில் பண்டிக்கோட்டு பிள்ளையார் ஆலயம் அருகாக ஆசிரியர் ஒருவரின் வீட்டில் இருந்து பெறுமதிவாய்ந்த சொத்துக்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரான இலட்சுமணன் என்பவரது வீட்டிலேயே 76 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 2 இலட்சம் ரூபா தொகைக்கான காசோலை, துவிச்சக்கரவண்டி, உடுபுடவைகள் ஆகியவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, அன்றைய தினம் அப்பகுதியிலுள்ள வேறு வீடுகளிலும் களவுகள் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகிறது; (உ-226)

## வெங்காயச் செய்கையில் நாட்டம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்குப்பகுதி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

விளைநிலம் செம்மைப்படுத்தல், பாத்தி கட்டுதல், வெங்காய நடுகை ஆகியன இப்பகுதித் தோட்டங்களில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, வெங்காயச் செய்கைக்கு வாய்ப்பான காலம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பெயர்ப்பலகை சேதம்

(வட்டுக்கோட்டை)

வழுக்கையாறு மயானத்துக்கு அருகில் நாட்டப்பட்டிருந்த வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை என்ற பிரதேச சபைக்குசொந்தமான கொங்கிறீற்பெயர்ப் பலகை நேற்று இரவு விசமிகளால் சேதமாக்கப்பட்டதோடு கொங்கிறீற் சிதைவுகள் வீதிக்கு குறுக்கே போடப்பட்டும் காணப்பட்டது. இதனால் இவ்வீதியை பயன்படுத்துவோர் பெரும் பெரும்அசௌகரியங்களையே எதிர்கொண்டனர். (உ-216)

# கொழும்பு நகர்ப்பகுதியில் வெவ்வேறு சம்பவங்களில்

திருவுருவப்படம் நல்லூரில் இருந்து திவ்ய ஜீவனமண்டபம் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகி ஞாபகார்த்த உரைகள் சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் ஆலோசனைக் கூட்ட முடிவில் மறைந்த ... வேலின் அறிமுகவுரையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மெய்யியல்த்துறை முதுநிலை விரிவுரையாளர் க. சிவானந்தமூர்த்தி 'சைவ சித்தாந்தம் வாழ்வுக்கான தொரு வழிகாட்டி' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## காமினி அத்துக்கோறளையின்

# மறைவுக்கு பிரதமர் ரணில் அனுதாபம்

(கொழும்பு

மறைந்த அமைச்சர் காமினி அத்துக்கோறளை நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதில் என்னுடன் இணைந்து செயற்பட்டதுடன் அதில் பெரும் பங்கு வகித்தார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

அமைச்சர் காமினி அத்துக்கோறளையின் மறைவு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஐக்கிய தேசிய முன்னணி. ஆட்சி அமைப்பதற்கு காமினி அத்துக்கோறளை பெரிதும் உந்துசக்தியாக இருந்தார்.

1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவிய பின் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் நம்பிக்கையுடன் நானும் அவரும் 1973 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்தோம் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் காலஞ் சென்ற அமைச்சர் காமினி அத்துக்கோறளை சிறந்த அரசியல்வாதிக்குரிய குணாதிசயங்களுடன் சிறந்த அரசியல் பேச்சாளருமாக இருந்தார் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

எடுத்து வருமாறு விசாரணையினை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர் மேலும் அறிவித்துள்ளனர்.

- சின்னையா இராமசாமி
  (கோ. இல. பி. ஐ- 330)
  மட்டுவில் வடக்கு
  சாட்சி:-
  சி கிருபாகரன்
- யேமின் பிரபாகரன்
  (கோ. இல. பி.ஐ- 336)
  105 கோவில வீதி
  சுண்டுக்குளி
  சாட்சி:-
  வி. கௌரி
  ஜே/ 78 கிராமசேவகர்
- எஸ். அற்புத நேசன்
  (கோ. இல ஐ ஆர்-150)
  கற்கோவளம் பருத்தித்துறை
  சாட்சி:-
  ஈஸ்வரி
  அப்பகுதி கிராமசேவகர்
- கே. சுரேஸ்
  கே. பாலகிருஸ்ணன்
  (கோ. இல. பி ஐ- 9/67)
  125/1 பீச்றோட் குருநகர்
  சாட்சி:-
  ஜே/67 கிராம சேவகர்
- இராசலிங்கம் இராச நேசன்
  (கோ. இல. ஐ. ஆர்- 160)
  சாவற்கட்டு சுதுமலை
  சாட்சி:-
  ஜே/331 எம். தயானந்தன்
- அருளப்பு அன்ரனியூலியன்
  கோ. இல. பி ஐ:-398,
  39 பீச் றோட் குருநகர்
  சாட்சி:-
  ஜே/69 கிராம சேவகர்

# கொழும்பு நகர்ப்பகுதியில் வெவ்வேறு சம்பவங்களில் பத்துப்பேர் கொலை

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையிலும் மாளிகாவத்தையிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை மாளிகாவத்தை தெசாராமா விளையாட்டரங்கிற்கு அருகில் வெள்ளை வான் ஒன்றில் வந்த குழுவினர் சரமாரியாக சுட்டதில் 8 பேர் அதே இடத்தில் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, கொட்டாஞ்சேனைப் பகுதியில் இரண்டு சடலங்கள் கத்திக்குத்துக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் நடத்திவருகின்றனர். (செ-7)

## அரச துறைகளில் காணப்படும்

# 3000 வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை

(கொழும்பு)

அரசநிறுவனங்கள், திணைக்களங்களில் நிலவும் 3 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன அமைச்சின் எதிர்கால வேலைத்திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் 3 ஆயிரம் வெற்றிடங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது

போட்டிப் பரீட்சைகள் மூலம் தகுதியானவர்களுக்கே இப்பதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# இன்று ஒரு தகவல்

## உண்மையும் நேர்மையும்

சரஸ்வதி நதிக்கரையிலிருந்த ஒரு நாட்டின் அரசன் பிரபஞ்சனன். ஒருநாள் அவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான் காட்டில் ஒரு பெண்மான் தன்னுடைய குட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது. இவன் அதைப் பார்த்துவிட்டான். அம்பை எடுத்து அங்கே விட்டான். அது அந்த மானைக் குத்தியது. உடனே அந்த மான் ஒரு சாபம் கொடுத்து விட்டது. அம்பு வீசிய அரசன் புலியாக மாறக்கடவது என்று அந்தச்சாபம் உடனே பலித்தது. அரசன் புலியாக மாறி விட்டான். உடம்பெல்லாம் கோடுகோடாக ஆகி விட்டது. பின்னர் வாலும் உண்டாகியது. உடனே அந்த மானைப்பார்த்து 'நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

'நீ நூறு வருடம் புலியாக இருந்து சாபத்தைஅனுபவிக்க வேண்டும். அதன் பின்னர் 'நந்தா' என்கிற பசு மூலமாக உனக்குச் சாபவிமோசனம் ஏற்படும்' என்று சொல்லிஅந்த மான் உயிரை விட்டுவிட்டது. புலியாகமாறியராஜா வாலை ஆட்டிக்கொண்டு காட்டுக்குள் ஓடிப்போய் விட்டார். நூறு வருடங்களுக்குப் பின்னர், ஒருநாள் அந்தக் காட்டுக்கு நிறையப் பசுமாடுகள் மேய வந்தன காலையில் வந்த மாடுகள் எல்லாம் மாலையில் ஊருக்குத் திரும்பி விட்டன. ஒரேஒரு பசுமாடு மட்டும் தங்கிவிட்டது. இது தங்கியதை மற்றைய மாடுகள் கவனிக்கவில்லை. அந்தநேரம் பார்த்து மழை வேறு பிடித்துக் கொண்டது. இந்த மாடு மட்டும் தனியாக ஒரு மரத்தடியில் நின்றுவிட்டு மழை விட்டதும் ஊரைப்பார்த்து நடக்க ஆரம்பித்தது.

அந்தநேரம் பார்த்து ஒரு புலி தனது குட்டிகளுக்கு இரைதேடிக்கொண்டு அந்தப் பக்கமாக வந்துவிட்டது. இந்தப் பசுமாட்டைப் பார்த்து விட்டுப் பாய்வதற்கு தயாராகி விட்டது

அந்த நேரத்தில் அந்தப் பசு தனது உயிர் போவதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஆனால் கோகுலத்துள் தனது கன்றுக் குட்டி தனக்காகக் காத்துக் கொண்டிருக்குமே என்று நினைக்கிற போது தான் அதன் மனது மிகவும் கஷ்டப்பட்டது உடனே அந்தப்புலியைப் பார்த்து ''ஐயா கோகுலத்திலே எனது கன்றுக் குட்டி மிகுந்த பசியோடு எனக்காகக்காத்துக் கொண்டிருக்கப் போனது புலி. ''நான் வார்த்தை தவறமாட்டேன். சொன்ன சொல் தவறினால் என் னன்ன பாவங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என்னை நம்புங்கள் என்றது பசு, புலியின் மனம் இளகியது'' சரி! உன்னை நம்புகிறேன் நீபோய் விட்டுவா, ஆனால் ஒரு விஷயம்! ''உயிர் தப்புவதற்காகப் பொய் சொல்லலாம் அது ஒன்றும் தவறில்லை என்று சிலர் உனக்கு உபதேசம் செய்யலாம், அதைக்கேட்டு நீ ஏமாந்து விடக் கூடாது. வாக்குக் கொடுத்தபடி இங்கு வந்து சேரவேண்டும்'' என்றது புலி. சரி என்று சொல்லி விட்டு அந்தப் பசு வேகமாக ஊருக்குள் ஓடியது. கன்றுக் குட்டியைப் பார்த்துப் பால் கொடுத்தது. அதன் பின் விபரத்தைச் சொல்லியது.

அதைக்கேட்ட கன்றுக் குட்டி 'அப்படியென்றால் நானும் உன்னோடுவந்து அந்தப்புலிக்குஇரையாகி விடுகின்றேன்' என்றது. அப்படியெல்லாம் செய்யக்கூடாதுஎன்று சொல்லி அந்தப்பசு அந்தக் கன்றுக்குட்டியை மற்றப்பசுக்களிடம் ஒப்படைத்துவிட்டுக் காட்டுக்குப் புறப்பட்டது. பொய்சொல்லி உயிரைக்காப்பாற்றினால் அது உண்மைக்குச் சமம். உயிருக்கு அழிவை உண்டுபண்ணுகிற உண்மை பொய்க்குச் சமம். அதனால் நீ புலிக்குக் கொடுத்த வாக்குறுதியைப்பற்றிக் கவலைப் படாதே' என்று மற்றைய பசுமாடுகள் சொல்லிப்பார்த்தன. இந்தப் பசு அதற்குச் சம்மதிக்கவில்லை.

'மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக வேண்டுமென்றால் பொய் சொல்லலாம். என் உயிரைக்காப்பாற்ற நான் பொய்சொல்ல மாட்டேன்! என்று சொல்லிவிட்டு அந்தப்பசு வேகமாகப் புலியிடம்போய் நின்றது. அங்கு போய்ப்பார்த்தால் கன்றுக் குட்டி இதற்கு முன் அங்கு போய்நின்று கொண்டிருந்தது. என் தாயோடு என்னையும் இரையாக்கிக்கொள் என்று கேட்டுக்கொண்டிருந்தது. இப்போதுதான் அந்தப்புலிக்கு தன்னுடைய குட்டிகளின் நினைப்பு வந்தது. நான் இறந்துவிட்டால் என் குட்டிகள் என்ன பாடுபடும்? அதே நிலைமைதானே இந்தக் கன்றுக்கும் ஏற்படும்என்று நினைத்தது.

அதன் மனது மாறிவாய்மை ஜெயித்து விட்டது; சத்தியம்

இலங்கையின்

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா உடனடியாக தலையிடாது

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

இலங்கைஇனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்குண்டு. ஆனால், உடனடியாக இந்த விடயத்தில் இந்தியா தலையிடாதென ம.தி.மு.க. பொதுச் செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை இடைத் தேர்தல் தொடர்பாக சென்னையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் மற்றும் நிதியமைச்சர் ஆகியோரை இலங்கைப் பிரச்சினை தொடர்பாக அண்மையில் சந்தித்துப் பேசியபோது இவ்விடயம் குறித்து கூடிய கவனமெடுப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப் படுவதுதான் ம.தி.மு.க.வின் நிலையென வும் வை.கோ. மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

### கடற்றொழில் கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் நன்மை கருதி வடக்குக் கிழக்கு மாகாண கடற்றொழில் கூட்டுறவு அமைச்சினால் அண்மையில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது

இவ்இரண்டு நாள் கருத்தரங்கில்உற்பத்தி, வருமானம் என்பவற்றை எவ்வாறு அதிகரித்துக்கொள்வது என்பவை குறித்து ஆராயப்பட்டது

(எ 8)

### மட்டு மாவட்டத்தில் கடந்த வருடம் கைதான 146பேரில் 77பேர் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புமாவட்டத்தில் கடந்த வருடம் 146 கைது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகமட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் படையினரின் தடுப்பு முகாம்களில் 60பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், 77பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய9பேரைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (உ-4)

### வருடாந்த ஒன்று கூடல்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுஎதிர்வரும் 6ஆம்திகதி மு.ப 11மணிக்கு பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குபிரதமவிருந்தினராக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து கொள்கிறார்.

(செ-120)

### காமினி அத்துக்கோறளையின் பூதவுடலுக்கு இன்று பாராளுமன்றில் அஞ்சலி

(கொழும்பு)

மறைந்த அமைச்சர் காமினி அத்துக் கோறளையின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பாராளுமன்றக் கட்டடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சார்க் நாடுகளின் உச்சிமகாநாடு காத்மண்டுவில் நடைபெறவிருப்பதால், அக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன் மறைந்த அமைச்சர் காமினி அத்துக் கோறளையின் பூதவுடலுக்கு ஜனாதிபதி சந்திரிகா நேரில் சென்று அஞ்சலி செலுத்திய பின் சார்க் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக காத்மண்டுவுக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் அஞ்சலி செலுத்தவுள்ளனர். (வ)

### கொக்குவில் கிழக்கில் திருடர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கோவில் வீதிப் பகுதியில் இரவு வேளையில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளதனால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மேற்படி வீதிப் பகுதியில் வீதி விளக்கு பழுதடைந்தமையால் இப்பகுதி இருளில் மூழ்கி

### வசதிகள் குறைந்த நிலையில் வாடும் மணற்காட்டு மக்களுக்கு உதவிடுக!

#### அமைச்சர் மகேஸ்வரனிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பகுதி நீண்ட காலமாக பலராலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. அரச அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை எம்மைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. எமது பகுதியில் மின்

வளத்தை சுரண்டுவதிலே அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் வசம் குடாநாடு இருந்த போது வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் அள்ளத் தடைவிதிக்

கோகுலத்திலே எனது கன்றுக் குட்டி மிகுந்த பசியோடு எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும். அதற்குப் பால் கொடுக்கத் தான் இவ்வளவு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். நான் போய்ப் பால் கொடுத்து விட்டு எனது கன்றுக் குட்டியை மற்றப் பசுக்களிடம் ஒப்படைத்து விட்டுவருவதற்கும் அதைக் கடைசியாகப் பார்த்து புத்திமதி சொல்லி விட்டு வருவதற்கும் ஆசைப் படுகின்றேன். நீங்கள் அதற்கு அனுமதி கொடுத்தால் நான் போய் விட்டு வந்து விடுவேன் என்றது.

''நீ சொல்வதை நான் எப்படி நம்பமுடியும். உன்னை இப்போது போக விட்டு விட்டால் நீ திரும்பி வருவாய் என்பது என்ன நிச்சயம்? இன்றைக்கு நீ எனக்கு இரையாக வேண்டும் என்பது விதி'' என்று சொல்லிக் கொண்டே ...தது.

அதன் மனது மாறிவாய்மை ஜெயித்து விட்டது: சத்தியம் காப்பாற்றி விட்டது. அந்தப் புலி பசுவிடம் தனக்கு உபதேசம் செய்யும்படி கேட்டுக் கொண்டது. ''எல்லா உயிர்களுக்கும் எவன் அபயம் அளிக்கிறானோ அவன் பிரமத்தையடைகின்றான்'' என்று சொல்லியது பசு. அப்போது தான் அந்தப் பசுதான் நந்தா என்பது புலிக்குத் தெரிந்தது. உடனே அதைத் தொட்டுக் கும்பிட்டது. உடனே புலியுருவம் மாறிப் பழைய ராஜாவடிவம் வந்தது பிரபஞ்சனன் நாட்டுக்குத் திரும்பி ஆட்சி செய்ய ஆரம்பித்தான், இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது உண்மையிலும் நேர்மை கலந்திருக்கவேண்டும் என்பதுதான். □

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

மேற்படி வீதிப் பகுதியில் வீதி விளக்கு பழுதடைந்தமையால் இப்பகுதி இருளில் மூழ்கியுள்ளமை திருடர்களுக்கு வாய்ப்பாக இருப்பதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-19)

## நேர்முகப் பரீட்சை

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவிருக்கும் 2002 ஆம் ஆண்டிற்கான தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்வதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கள் காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் தமது கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடன் அழைப்புக் கடிதத்தையும் கொண்டு வருமாறு பிரதேச செயலர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (செ-120)

மைப் பற்றிச் ... இல்லை. எமது பகுதியில் மின்சாரம், போக்குவரத்து வசதிகள் இல்லை என்பதுடன், சீரான வீதி கூட இல்லை.

இந்த நிலையில், முன்னர் அதிகாரத்திலிருந்த அரசியல்வாதிகளிற்கு இது தொடர்பாக பல தடவை தெளிவுபடுத்தியும் ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் இந்து சமய விவகார அமைச்சர் தி மகேஸ்வரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இந்த நிலையில் எமது பகுதி மணல் அள்ளத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதைவிட இப்பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் விடுதலைப்புலிகளால் சவுக்கு மரங்களும் நடப்பட்டன.

ஆனால் தற்போது சவுக்கு மரங்கள், வகை தொகையின்றி அழிக்கப்பட்டதுடன், இப்பகுதியில் இருந்து தினமும் பெருமளவு மணல், வியாபார நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

இதனால் எமது பகுதி கடல் நீரில் மூழ்கும் அபாய நிலை காணப்படுகின்றது இதைப் பல்கலைக்கழக ''புவியியல்'' துறைசார் வல்லுநர்களே உறுதிப்படுத்துகின்றார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ- 43)

## கலந்துரையாடல்

(மானிப்பாய்)

சாவற்கட்டு கிராமத்திலிருந்து முன்பள்ளி நிலையங்கள் தற்போது செயற்பட்டுவருகின்ற போதிலும் மேலும் ஒரு புதிய முன்பள்ளி நிலையத்தை அங்கு அமைப்பதற்கு சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் முன்வந்துள்ளனர்.

இது சம்பந்தமான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறும் என்று பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (செ-120)

## சிந்தனைக்கு விருந்து

### பாலையில் எவர் வாழ்வார்?

மரம்வெட்டி வாழ்வார் ஒருபால் மறுபால்
மரம் நட்டு வாழ்வாருமுள்ளார் – மரமெல்லாம்
வேரோடு சாய்த்து விறகாய் எரித்ததன்பின்
யாரோஇப் பாலையில்வாழ் வார்?

-பழையவன்

# இந்திய-பாகிஸ்தான் முறுகல் தணிவிற்கு சார்க் மாநாட்டை சாதகமாகப் பயன்படுத்துக

## இரு நாடுகளிடமும் ஐ. நா. செயலர் வேண்டுகோள்

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறும் சார்க் மாநாட்டைப் பயன்படுத்தி இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான முறுகல் நிலையைத் தணித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய நாட்டு சபையின்பொதுச் செயலாளர் கோபி அனான் கோரிக்கை விடுத்துள்ளார்

நாளையதினம் காத்மண்டுவில்நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் இந்தியப்பிரதமர் வாஜ்பாய், இந்தியவெளிநாட்டமைச்சர் ஜஸ்வந்சிங் மற்றும் பாகிஸ்தான் சார்பில் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப்பு அந்நாட்டுவெளிவிவகாரஅமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்:

இந்திய நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதலை அடுத்து இந்திய-பாகிஸ்தான் உறவு விரிசலடைந்துள்ள இந்தநிலையில் இருநாடுகளுக்குமிடையில் போர் மூளும் அபாயமும்ஏற்பட்டிருக்கிறது

இதனால் சார்க் உச்சிமாநாட்டைப் பயன்படுத்தி இந்தியப்பிரதமரும் பாகிஸ்தான் ஜனாதிபதியும் தமது நாடுகளுக்கிடையிலான முறுகல் நிலையை தணிக்கவேண்டுமென கோபி அனான்மேலும் கேட்டுள்ளார்.

அத்துடன், இந்திய நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதல் தொடர்பாக லக்ஷறி இதொய்பா தீவிரவாத அமைப்பின் தலைவர்கைது செய்யப்பட்டுள்ளதையும் கோபிஅனான் பாராட்டியுள்ளார் (உ-5)

# 15 பேர் கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பகுதியில் நேற்று முன் தினம் மாத்திரம் ஆறு இந்துக்கள் உட்பட பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலையுடன் நிறைவுபெற்ற 24 மணி நேரத்திற்குள் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது;

இதேவேளை கடந்தடிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி இந்தியப் பாராளுமன்றத் தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற பெரிய தாக்குதல் சம்பவம் இதுவாகும் என அரச ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்; (செ-7)

### பாகிஸ்தான் அரசு கைது செய்துள்ள

# லக்ஷறிஇதொய்பாவின் தலைவரை ஒப்படைக்க கோருகிறது இந்தியா

(லண்டன்)

இந்தியநாடாளுமன்றதாக்குதலுக்கு காரணமென சந்தேகிக்கப்படும்லக்ஷறி இதொய்பா அமைப்பின் தலைவர் உட்பட 20 பேரை தம்மிடம் கையளிக்க பாகிஸ்தான் இணங்க வேண்டுமென இந்தியா கோரியுள்ளது.

இதேவேளை,

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இந்தியாவின் கடுமையான அழுக்கம் காரணமாகவே லக்ஷறி இதொய்பா அமைப்பின் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய விமானப் படைத் தளபதி கிருஸ்ணசாமி

(புதுடில்லி)

இந்திய விமானப் படையின் புதிய தளபதியாக எயார் மார்ஷல் கிருஸ்ண சாமி குடியரசுத் தலைவர் கே.ஆர் நாராயணனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் புதுடில்லியிலுள்ள இந்திய விமானப் படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் முன்னர் விமானப் படைத்தளபதியாகவிருந்த ஏயார் மார்ஷல் ஏ வை. டிர்ட்ணிஸ்சிடமிருநது படைப் பொறுப்புக்களை பெற்றுக் கொண்டார்

இதே வேளை புதிய கடற்படைத் தளபதியாக அட்மிரல் மாதவேந்திரசிங் கடந்த சனிக்கிழமை நியமிக்கப் பட்டமை நினைவிருக்கலாம்.

பாகிஸ்தானுடன் போர் தொடங்குவதற்கான சூழ்நிலைகள் நிலவியதையடுத்தே இம் மாற்றங்கள் நிகழ்வதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (உ-4)

# கொங்கோவில் மண் சரிவு 12 பேர் உயிரிழப்பு

(பிறேசவில்)

கொங்கோவில் மண் சரிவு காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வந்த மழையினால் மண்சரிவு ஏற்பட்டதையடுத்து நூற்றுக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

மழைதொடர்வதால் ஆபத்து அதிகமாகும் அபாயம் காணப்படுவதாக கொங்கோ வானிலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-7)

# அந்தாட்டிக்காவில் 2வது நிரந்தர நிலையம் இந்தியா அமைக்கும்

(புதுடில்லி)

அந்தாட்டிக்கா தனிக்கண்டத்தில் இந்தியாவின் இரண்டாவது நிரந்தரநிலையத்தை அமைக்கும் பணிகளை தொடங்குவதற்காக 21வது இந்திய அந்தாட்டிக்கா பயணக்குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புறப்படவுள்ளது.

தேசிய அந்தாட்டிக்கா மற்றும் கடலாராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்கர் பிரேம்சன்பாண்டே தலைமையில் இந்த விஞ்ஞானிகள்குழு கோவாவில் உள்ளவஸ்கோடகாமாவில்இருந்து பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. (உ-7)

### சட்டவிரோத குடியேற்றக்காரரை

# ஏற்றச் சென்ற கப்பல் கிறிஸ் கடலில் தத்தளிப்பு

(எதேன்ஸ்)

230 சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிச் சென்ற கப்பலொன்று கிறிஸ் கடற்பரப்பில் ஆபத்தில் சிக்கியுள்ளதாக அந்நாட்டு கடற்படை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஆபத்தில் சிக்கியுள்ள 230 பேரையும் மீட்பதற்காக மூன்று கப்பல்களும் இரு ஹெலிகொப்டர்களும் அனுப்பப்பட்டுள்ளன

ஆசிய பிராந்தியத்திலிருந்து சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றவர்களே கடலில் தத்தளித்த வண்ணம் இருப்பதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் (உ-7)

பாகிஸ்தான் தனது நாட்டில் இருந்து இயங்கும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுமென அமெரிக்கா எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

# விலங்குகளின் பாலில் மலேரியா தடுப்புமருந்து

(வாஷிங்டன்)

கால் நடைகள் மற்றும் ஏனைய விலங்குகளில் இருந்து சுரக்கும் பாலில்மலேரியாவுக்கான தடுப்பு மருந்து ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

தொற்று நோய்கள் மற்றும் ஒவ்வாமை பற்றி ஆராயும் தேசியமையத்தின் ஆராய்ச்சியாளர்கள் மலேரியாவை உண்டாக்கும் நுளம்புகளை அடிப்படையாக வைத்து ஒருவகையான சிறப்பு மரபணுக்களை உண்டாக்கியுள்ளனர்.

இவ்வாறு உண்டாக்கப்பட்ட மரபணுக்கள் விலங்குகளில் புகுத்தபபட்டுஅவைபால் சுரப்பிகளில் சென்று தங்குவதனால் மலேரியாவுக்கான நோய்த் தடுப்பு மருந்து அப்பாலிலேயே உருவாக்கப்பட்டு விடுகிறது.

இவ்வாறு குரங்குகளில்மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் 80 சதவீதம வெற்றியளித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேரியா தடுப்பு மருந்துகளை ஆடுகளில் இருந்து மிகவும் இலகுவாக உருவாக்க முடியுமெனவும் ஒருசில ஆட்டு மந்தைகள் மூலம் ஆபிரிக்கக் கண்டமக்கள் அனைவருக்கும் குறைந்தவிலையில் இத்தடுப்பு மருந்தை வழங்க முடியுமெனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (உ-5)

### முஷாரப்

# சீனா விஜயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் சீனாவுக்குஅவசர ஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நாளை நேபாள தலைநகர் காத்மண்டுவில் சார்க் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது தெரிந்ததே.

இம்மாநாட்டிற்குச் செல்லும் முஷாரப் அதற்கு முன்னர் சீனாவுக்குச் சென்று அங்கிருந்து நேபாளம் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது. (உ-5)



## விளையாட்டு செய்திகள்



# ஆஸி. கிரிக்கெட் அணியை பாக். அணி தோற்கடிக்கும்

(இஸ்லாமபாத்)

சர்வதேச கிரிக்கெட் டெஸ்ட் தரப்படுததலில எட்டாவதாக உள்ள பாகிஸ்தான், உலகச் சம்பியனான அவுஸ்திரேலியாவை தோற்கடிக்கும என பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் முடசுயிர் நசார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியை தோற்கடிக்கக் கூடிய அணி ஒன்று உலகில் இருக்குமானால அது பாகிஸ்தான் அணியாகத் தானிருக்கும் என்றும் அந்த திறமை பாகிஸ்தானிடமே உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார.

வரும் செப்ரெமபர் மாதம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது இதன் போதே தமது அணிக்கு அவுஸ்திரேலியாவை தோற்கடிக்கும் சந்தர்ப்பம கிடைக்கும் என்றும் நசார் நம்பிக்கை தெரிவிததுள்ளார். (உ-2)

# வாகனமோதலில் எழுந்த சீற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம்மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் மோட்டார்சைக்கிள் சிறுசேதமடைந்தது.

இதையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவருக்கும் சைக்கிளில வந்தவருக்குமிடையே வய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் அங்கு நின்றவர்களும அதில் நியாயம் பேசத்தொடங்கியதில் இரு அணிகளாகத்திரண்டுமோதுகின்ற நிலை ஏற்பட்டது.

இதனால் வீதிப் போக்குவரத்துதடைப்பட்டது. நிலைமையை அறிந்த இராணுவத்தினரும் பொலிஸாரும அப்பகுதிக்கு விரைந்து சென்று நிலமையை கட்டுப்படுத்தி அவர்களைச் சமாதானமாக்கி அனுப்பினார்கள். (எ-19)

# மது போதையில் நின்றோர் குழுமோர்தல்; இளைஞனின் காது துண்டிப்பு

(மானிப்பாய்)

பெரியவிளான் பகுதியில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் காது துண்டிக்கப்பட்ட நிலையில்இளைஞர்ஒருவர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார்.

புதுவருடப் பிறப்பான கடந்த செவ்வாயன்று பிற்பகல்வேளை மது போதையில் காணப்பட்ட இரு குழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காது துண்டிக்கப்பட்ட நிலயயில் தொட்டிலடியைச் சேர்ந்த இ.ரவீந்திரகுமார்(வயது-19) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-232)

# தென்னாபிரிக்க கிரி. அணி சகலதுறை ஆட்டக்காரர் போட்டியில் இருந்து நீக்கம்

(கன்பெரா)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரரான லான்ஸ் குளுஸ்ணர் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு இவரிற்குப் பதிலாக மூறப்ந்து வீச்சாளர் நிக்கி போஜே அணியில் இடம் பெற்றுள்ளார்.

கடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் குளுஸ்ணர் 47 ஓட்டங்களையே பெற்றமையால் அணியிலிருந்து நீக்கப்பட்டு தென்னாபிரிக்கா அனுப்பப்பட்டுள்ளார். [உ-2]

# தென்னைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து

(புத்தூர்)

புத்தூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில்தென்னைகளுக்குமைற்ஸ் நோய்த்தடுப்புமருந்து விசிறப்பட்டுவருகின்றது. (செ-235)

தெரிதலும் தேர்ந்துசெயலும் ஒருதலையாச்
சொல்லும் வல்லது அமைச்சு
- குறள்

# வலம்புரி

## முதுமை கலைகிறது!

தமிழர்விடுதலைக்கூட்டணியின்வளர்ச்சியில்அதன் முன்னேற்றத்தில் கட்சிகணியின் தலைவர் எம். சிவசிதம்பரத்திற்குசமான பங்குண்டு ஆனால் இப்போது சிவசிதம்பரத்தின் முதுமையும், உடல்நலக் குறைவும் அவர்அரசியலில் ஈடுபடுவதற்கு ஒத்துளைக்காது. இந்நிலையில் ஓய்வாக இருக்கின்ற சிவசிதம்பரத்தை எப்படியும் பாராளுமன்றம்கொண்டுவந்தே தீருவது என்ற சபதத்தில் கூட்டணியின் உப தலைவர் ஆனந்தசங்கரி மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

ஓய்வெடுக்க வேண்டிய காலத்தில் உபத்திரம் கொடுப்பதுபோல் ஆனந்தசங்கரியின் செயல் அமைந்திருப்பது அரசியலின் தூரநோக்குக் கருதியோ, அல்லது முதுமைஅடைந்துள்ள சிவசிதம்பரம் முன்னர் போல்பாராளுமன்றத்தில் மீண்டும் தனது சிம்மக்குரலால் தமிழர் உரிமைக்குக் குரல் கொடுப்பார் எனக் கருதியோ அல்ல- தற்போது கூட்டணிக்குள் எழுந்துள்ள குத்துவெட்டுகளைச் சமாளிக்க திருதராட்டினன் சபையில் இடையிடையே தோன்றி ஆலோசனை வழங்கும் வேதவியாசர் போல் கூட்டணியின் குத்து வெட்டுக்களைச்சமாளிக்க சிவசிதம்பரமென்ற பெரியவர் தேவைப்படுகிறார். என் செய்வது சங்கரியாரும் மாவையரும் பூட்டிய அறைக்குள்மோதிக்கொள்வதை தடுப்பதற்கு தள்ளாத வயதிலும், ஓய்வு- உறக்கத்தைவிட்டு சிவசிதம்பரம் அவர்கள் நாடு திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை துரதிஷ்டமே.

எதுவாயினும் ஓய்வாக இருந்த சிவசிதம்பரம் ஓய்வைக் கலைத்துக் கொண்டு அரசியலில்பிரவேசிக்க தன் முதுமையிலும் கூட்டணியின் வெற்றிக்காக கடந்த இரு தேர்தல்களிலும்- அயராதுபாடுபட்ட இணுவில் முத்துலிங்கம் கூட்டணியால்ஏமாற்றப்பட்டு அரசியலில்இருந்து ஓய்வு பெறுவது ம்ஒருமுதுமையின்வருகை இன்னோர் முதுமைக்கு ஓய்வு கொடுக்கிறது.

இவை ஒருபுறமிருக்க அடுத்த ஐந்து ஆண்டு காலத்திற்குள்சமாதானத் தீர்வு ஏற்படாவிட்டால் அதன் பின்னர் மானமுள்ள எந்தத் தமிழனும் பாராளுமன்றம் செல்லமாட்டான் என கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் கூறியிருப்பது ஐந்து வருடங்களின் பின் தனக்கு இயலாமை ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் என்றஉண்மையும் இங்கு நோக்குதற்குரியது.

## யாழ்ப்பாணத்திற்கு இரு தடவைகள் வருகை

# ஈழத்துச் சிதம்பரத்தில் இசைமழை பொழிந்த

# தமிழக நாதஸ்வர, தவில் கலைஞர்கள் பேட்டி

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும்காரை நகர் சிவன் கோவிலில் கடந்த மாதம் 29,30 ஆகிய திகதிகளில் இடம் பெற்ற தில்லைக் கூத்தனின் ரதோற்சவத்தின் போதும்,ஆருத்திராஅபிஷேக ஆராதனை அன்று தமிழகத்திலும், ஈழநாட்டிலும் தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் கச்சேரியுடன் இணைந்து எடுத்தபேட்டி இங்கு கட்டுரை வடிவில் பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)

இணுவில் ஊரில் பிறந்து அளவையூருக்கு பெருமை தேடித் தந்த ஈழத்தின் ஈடு இணையற்ற தவில் மேதை லய ஞான குபேரபூபதி தட்சணாமூர்த்தியின்பெருமையை எனது பெற்றோர் கூறக்கேட்டிருக்கிறேன். எட்டு வயதினில தவில் கச்சேரி செய்ய ஆரம்பித்த அமரர் தட்சணாமூர்த்தி உருவான நாச்சியார் கோயில் ராகவப்பிள்ளையிடம் குரு குலவாசம் செய்து தவில் பயிலச் செய்ததாகவும், ஆனால் அமரரின் குருவான ராகவப்பிள்ளை உனக்கு நான் தவில் சற்றுத்தர என்னிடம் ஒன்றும் இல்லை. எனது குரல் உனது காதில் ஒலிக்க; அந்த ஒலி உனது கைகளில் ஓசை எழுப்புவதை நான் அறிவேன். அது கடவுள் உனக்குத் தந்த வரப்பிரசாதமாகும் என்று கூறி மிகச் குறுகியகாலபயிற்சியுடன் ஈழததிற்கு திருப்பி அனுப்பியதாகவும்ஒரு தகவல்.

ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் திருவாதிரை நாளன்றுஇடம்பெற்றவிஷேட அபிஷேக ஆராதனையின் போது நாதஸ்வர தவில் மழை பொழிய வந்த தமிழக தவில் வித்துவான் கலைமாமணி திருப்பூங்கூர் ரி ஜி முத்துக்குமாரசாமி இவ்வாறு ஓர் புன்சிரிப்புடன் கூறினார்.

'அற்புதமான தெய்வீகக் கலைஞன் லயஞானகுபேர பூதி தட்சணாமூர்த்தியின் திருவுருவத்தையோ, தவிலில் அவரது திருக்கரங்கள் ஆடிய திருவிளையாடல்களையோ அறிந்திரேன் நான் பிறப்பதற்கு இருபது வருடங்களுக்கு முன்பே தட்சணாமூர்த்தி அமரராகி விட்டார். ஆனால்அவரது மகன் உதயசங்கருடன் கச்சேரி செய்யும் பெரும்பேற்றினை பெறறிருந்தேன் என்றும் அவர் சொன்னார்.

30.12.2001 சனிக்கிழமை அதிகாலை 2 மணியிலிருந்து தொடர்ந்து சுமார் ஐந்து மணித்தியாலயங்கள் வரை தவில் கச்சேரி செய்த கலைமாமணி திருப்புங்கூர் ரி ஜி. முத்துக்குமாரசாமியின் தவில் கச்சேரி அமரர் தட்சணாமூர்த்தியின் கச்சேரியை என் மனக கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது.

அமரர் தட்சணாமூர்த்தி தவில் வாசிககும் போது அவரது அங்க அசைவுகள், முகபாவனைகள் முன் வரிசையிலிருந்து தாளம் போடும் கலைஞர்களை உற்று நோக்கும்அந்தக் கண்பார்வை அனைத்தும் சாட்சாத் லய ஞானகுபேர பூபதி அமரர் தட்ணாமூர்த்தி தவில் வாசிக்கும் காட்சியை கற்பனையில் காணக் கூடியதாக இருந்தது.

அமரர் தட்சணாமூர்த்தி எட்டு வயதில் கச்சேரி செய்ய ஆரம்பிக்க கலைமாமணி முத்துக்குமாரசாமி தனது பதினொராவது வயதில் கச்சேரி செய்ய ஆரம்பித்ததாகவும் தனக்கு இபபொழுது வயது முப்பத்தொன்பதே தான் என்றும் பெருமையுடன் கூறி ஒரு புன்முறுவல் பூத்தார்.

### ரசிகன்

ரஷ்யா,மொறிசியஸ்,அமெரிக்கா,மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் கச்சேரிசெய்ததாகப் பெருமையுடன்கூறிக் கொள்ளும் இவர்இலங்கைக்கு நான்கு தடவைகள வந்திருந்ததாகவும்,முதல்தடவையாக அன்பர் என் தருமராஜா (எம ஜீ ஆர்)அவர்களின்அன்பின் அரவணைப்பினால் யாழ்ப்பாணத்திற்கு அதுவும் ஈழத்து சிதம்பரம் எனஅழைக்கபபடும் காரை நகர் சிவன் கோவிலில் தில்லை நடராஜக் கூத்தன் ரதமேறிவரும்போது அந்த தில்லை நடராஜனுக்கு ஆருத்திரா அபிஷேகத்தின் போதும் ஈழத்து நாதஸ்வர வித்துவான் வி கே.பஞ்சமூர்த்தி அவரது புதல்வன் குமரேசனுடம் இணைந்து வாசிக்கும முதல்பேற்றினைப் பெற்றேன் எனவும் சொன்னார்.

### ஆஸ்தான வித்துவான்

திருப்புங்கூர் கலைமாமணி முத்துக்குமாரசுவாமியுடன் இணைந்து தவில் வாசித்த தவில் நாதமணி தலையங்காடு என்.ஆர்.இராமநாதன் ஒன்றும் சளைத்தவர் அல்லர். திருப்புங்கூர் முத்துக்குமாரசாமி திருச்சி வானொலியில் முதலாந்தர தவில் கலைஞராக இருநது வருவதுடன காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவானாகவும் இருந்து வருகிறார்.

இவர்களுக்கு நாதஸ்வரம் வாசித்த மாமபலம் எம். கே. எஸ்.சிவா, எம்.கே. எஸ்.நடராஜன் ஆகிய இருவரும்இன்று தமிழகத்தில் புகழ்பூத்த முதலாந்தர நாதஸ்வரககலைஞர்களாக விளங்கி வருகிறார்கள் மாமபலம எம. கே. எஸ்.சிவா தனது தந்தையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எட்டு வயதில் நாதஸ்வரம் வாசிக்கத் தொடங்கியதாக பெருமை கொளகிறார்.

சென்னை வானொலியில் முதலாந்தர கலைஞராக விளங்கி வரும் மாயபலம் எம் கே.எஸ்சிவா 40 வருடங்களாஇத்துறையில் ஈடுபட்டுளளார் திருமலை திருப்பதியில் ஆஸ்தான வித்துவானாகவும் காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவானாகவும் விளங்கி வருவதுடன் 1994 ல் தமிழக முதலவராக இருந்த செலவி ஜெயலதாவினால் 'கலைமாமணி' பட்டமளித்து கௌரவிக்கப்பட்டுளளார்.

மதுரை றமணிகுருயி 'நாதவிசாரத் நாதலயசுரவிசாரத்' எனும் பட்டத்தை வழங்கியுள்ளார். காஞ்சி காம கோடி பீடம் நாதஸ்வர சிகாமணி எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

பிரான்ஸ், அமெரிக்கா, இலங்கை, அந்தமன் தீவு ஆகிய வெளிநாடுகளில இசைக்கலை வியாபித்திருந்தது.

அவர் தனது கருத்தைத் தெரிவிக்கையில், இலங்கைக்கு மூன்று தடவைகள விஜயம் செய்திருந்த போதும் யாழ்ப்பாணத்துக்கு இரு தடவைகளே வரமுடிந்தது.

ஈழத்து கலைஞர்களான இணுவையூர் தவில் வித்துவான் என். ஆர். சின்னராஜா அவரின் மகன் எஸ். ஆர். எஸ் சுதாகர், நாச்சிமார் கோயில் கே. கணேஷ் இணுவையூர் ஆர். புண்ணியமூர்த்தி கே. நித்தியானந்தம் ஆகியோருக்கு நாம் நாதஸ்வரம் வாசித்தோம்.

ஈழத்தின் பிரபலநாதஸ்வர வித்துவான்களை வீ. கே.கானமூர்த்தி, வீ கே பஞ்சமூர்த்தி ஆகியோருடன் நாதஸ்வரம்இணைந்துவாசிக்கும் பெரும் பேற்றினையும் பெற்றிருந்தேன்.

ஈழத்துச் சிதம்பரத்திலே சிங்கார வேலனே தேவா என்று காரைக்குறிச்சியாரின் வாசனையை ஏத்ததாக மாம்பலம் எம். கே. எஸ் சிவா சகோதரர்களின் சிங்கார வேலனே தேவா என்ற இசை வாசிப்பு எந்தவிதமான ஐயுறவுக்கும் இடமின்றி அதே ரசனையுடன் ரசிகர்களை மெய்மறக்கச் செய்துள்ளது.

எம் எஸ். விஸ்வநாதன், ராமமூர்த்தி இளையராஜா ஆகியோர் இசையமைத்த தமிழ்தெலுங்கு,மலையாளம கன்னடம் ஆகிய மொழிப் பாடல்களுக்கு இசையளிக்கக் கூடியவாய்ப்பினையும் பெற்றிருந்தேன்.

ஈழத்துக் கலைஞர்களையோ ரசிகர்களையோ பொறுத்தளவில் கலைகளை தெய்வீகக் கலைகளாக மதித்து அவற்றை வளர்த்தெடுப்பதில் மிகவும் ஆர்வமுடையவர்களாக இருப்பதை காணமுடிகிறது.

குழந்தைகள்முதல் முதியோர்வரை கச்சேரிகளை ரசனையுடன் ரசிப்பதை தமிழகத்திலும் பார்க்க இங்கே கூடுதலாக காணமுடிகிறது.

தமிழகத்தில் இசை நடனத்துறையை வளர்த்தெடுப்பதற்கு இசைக் கல்லூரிகள், நடனக் கல்லூரிகள அதிகம் காணப்படுகின்றது. இக்கல்லூரிகளில் அதிகமான இளம் மாணவர்கள் தவில், நாதஸ்வர கலையை சாஸ்திரிய முறைப்படி பயின்று வருகிறார்கள். இதே போல் ஈழத்திலும் இசைக் கல்லூரிகள தோன்ற வேண்டும்.

ஈழத்தின் எமது வருகைக்கு முழு மூச்சாக முன்னின்று உழைத்த என் தர்மராஜா (எம ஜி ஆர்) அவர்களை நாம் என்றுமே மறக்க முடியாது. ஆனால் எங்களுக்கு இங்கு வந்த பொழுது ஈழத்துச் சிதமபரத்தின் ஆஸ்தான வித்துவானாக கலைப்பணி புரிந்த கயிலாசக் கம்பரின் புதல்வர்களான கணேசன், வீரச்சாமி ஆகிய இருவரையும் மறக்க முடியாது,

இவர்கள இருவரிலும் கணேசன் அமரத்துவமான செய்தி எம்மை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

யாழ் நகரில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்கும் இசைத் துறைக்குப் அரும் பெரும் பணியாற்றி வரும் ''வலம்புரி'' நாளிதழின் தமிழ்ப் பணியை எம்மால் பாராட்டாமல்இருக்க முடியாது. தமிழகத்துக்கும் ஈழநாட்டிற்கும் ஓர்கலைப பாலமாக விளங்கி வரும் வலம்புரியின் சார்பில் ஈழத்து இசைக்கலைஞர்களுக்குஓர்நறசெய்தியையும் விடுக்க விரும்புகிறோம்.

இசை நடனத்துறையில் தமிழகம் தமிழகக் கலைஞர்கள ஈழத்து கலைஞர்களுககு அனைத்து உதவிகளையும செய்து ஓர் கலைப் பரிமாற்றத்தை காணவிழைகிறோம் என்று சொன்னார்.

## வடமராட்சியில் பத்திரிகையாளர் பயிற்சி நெறி

(திருநெல்வேலி)

நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வடமராட்சியில் உள்ள நெல்லியடி கூட்டுறவு மண்டபத்தில் பத்திரிகையாளர் பயிற்சி நெறி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிநெறி எதிர்வரும் 11ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆரமபமாகும் எனவும்,

பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர்க.பொ.த.சா. தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்எனவும்சங்கத்தலைவர் தெரிவித்தார். (உ-43)

## சாயி அருளமுதம்




தப்முள்ளே உறையும் இறைவனை நோக்கிச் செல்லும் யாத்திரையாக வாழ்க்கையை மாற்றுவதே உண்மையான பாரதீய நோக்கு ஆகும். பேரின்பத்தையடையும் நேரிய பாதையில் செய்யப்படும் உறுதியான பிரயாணம் அதுவே. அவ்வாறான ஸ்திரமான உறுதி தற்காலத்திலில்லை. மனக்கற்பனைகளும், வீண்ஆசைகளுமேஇன்றுமனிதனுடைய உள்ளத்தை ஆட்சி செய்கின்றன. காலையில் ஒன்றை விரும்புகிறீர்கள். மத்தியானத்தில் இன்னொன்றை விழைகிறீர்கள். மாலைவரை அந்த ஆசை நீடிப்பதில்லை. உங்கள் ஆசை நிறைவேறிவிட்டால் கடவுளைப் புகழ்ந்து உங்கள் பக்தியை ஆடம்பரமாகப் பவனிவர விடுகிறீர்கள். ஆனால் அது கைகூடாவிட்டாலோகடவுளைத் தூக்கியெறிந்துவிட்டு உங்கள் நம்பிக்கையின்மையைப் பறை சாற்றுகின்றீர்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை





யாழ்ப்பாணம் ரான் அலுவலகத்தில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் விஷேட மாநாடொன்றை நடத்தினார் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ் அரச அதிபர் கே. சண்முகநாதன் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் மற்றும் பிரதேச செயலர்களையும் படத்தில் காணலாம் (படங்கள்: கோபி)

# ரூபவாகினியின் புதுவருட நிகழ்விலிருந்து ஐயப்பதாஸக் குருக்கள் வெளியேறினார்!

## சம்பவத்தை விளக்கி அறிக்கை

(கொழும்பு)

ரூபவாஹினி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுவருட ஆசீர்வாத நிகழ்வில் கலந்து கொண்ட சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலா நிதி ஐயப்ப தாஸக் குருக்கள் அங்கு நடந்த இந்துமத அவமதிப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து வெளி நடப்புச் செய்தார்.

இது குறித்து விளக்கமொன்றை அவர் வெளியிட்டிருந்தார் அதன் விபரம் வருமாறு.

தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி நிலையத்தின் புது வருட ஆசீர்வாத நிகழ்வுக்கான-சகல மத குருமார்களும் அழைக்கப்பட்டிருந்தனர் இந்துமத ஆசீர்வாதத்துக்காக என்னையும் அழைத்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் நாள் சபரி மலை புனித யாத்திரையை மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்களுக்கான விஷேட பூஜைகள் இருந்த போதும் எமது தேசத்தின் நன்மை கருதியும், தேசிய தொலைக்காட்சி நிறுவனத்தின் அழைப்பை அங்கீகரித்தும் எனது கட்டாய கடமைகளை சற்றே ஒதுக்கிவைத்துவிட்டு ரூபவாஹினி அலுவலகத்திற்கு நேரத்திற்குச் சென்றேன்.

கட்டாய கடமைகளை கவனிக்க நேரத்தோடு உங்கள் நிகழ்வு நிறைவு பெற்றதும் என்னை அனுப்ப வேண்டும் எனப் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கூறியபோதும் ஏனைய மதகுருமார்களின், பௌத்த துறவிகளின் வருகைக்காக சுமார் ஒன்றரை மணிநேரம் காத்திருந்தேன்.

என்னுடைய கட்டாய கடமைகளுக்கான நேரம் கடந்தபோதும் ஊடகத்துறை அமைச்சரின் வருகைக்காக மேலும் காத்திருக்குமாறு வேண்டப்பட்டேன் அதற்கமைய காத்திருந்தேன்.

அமைச்சரின் வருகையைத் தொடர்ந்து ஆசீர்வாத நிகழ்வு ஆரம் பமானதும் பௌத்தகுருமார்களின் ஆசீர்வாத அனுசாசனம் நிறைவேறியது எமது நாட்டின் வழமையும், மரபின் பிரகாரமும் பௌத்தமத ஆசீர்வாதத்தை தொடர்ந்து இந்து மத ஆசீர்வாதம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்த மரபு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு ஏனைய மதங்களான கிறிஸ்தவ இஸ்லாமிய மதத்தவர்களின் ஆசீர்வாதங்கள் அடுத்தடுத்து இடம்பெறத்தொடங்கியன. ஏற்கனவே காத்திருக்க வேண்டிய நிலையில் இருந்த நான் புறக்கணிக்கபடுகிறேன் என்ற உளரீ தியான உபாதையினால் விசன மடைந்தேன்.

மதங்களிடையே ஒன்று, இரண்டு என்ற ஏரவேறுபாட்டை நான் கூறவில் [illegible] ஆனால் மரபும் வழமையு[illegible]ட்டமை எமது உரிமைக[illegible] டைத்த பலத்த அடியாக[illegible]ண்ணினேன் அது மட்டுமல்ல அங்கு பிரசன்னமாயிருந்த ஏனைய மதகுருமார்கள் பெரும்பான்மை மொழியான சிங்களத்தில் ஆசீர்வாதம் வழங்கிய வேளை தேசிய ரூபவாஹினியின் புதுவருட ஆசீர்வாத நிகழ்வில் தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில், ஆசீர்வாதமும் வாழ்த் தும் வழங்கும் வாய்ப்பு எனக்கு மட்டுமே இருந்தது.

இந்துமத குரு பீடாதிபதி என்ற பொறுப்புள்ள ஸ்தானத்தில் இருக்கின்ற நான், தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்ட நான் இந்த இரு நிலைகளிலும் புறக்கணிக்கப் படுகிறேன் என்பதை உணர்ந்து பொறுமை சாதிக்கக் கூடியவகையில் இருக்க முடியவில்லை இந் நிலை யில் என்னுடைய உரிமை, எனது பொறுப்பு இரண்டுமே என்னை உந்தித்தள்ள எனது ஆட்சேபனை யையும், ஆதங்கத்தையும், கண்டனத்தையும் சபையில் பகிரங்கமாகவே வெளிப்படுத்திவிட்டு.

ஊடகத்துறை அமைச்சரிடம் சென்று இந்துமதத்துக்கும் தமிழ் மொழிக்கும் இங்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை எனவே நான் வெளியேறுகின்றேன் எனக் கூறினேன்.

ஒரு மதகுரு என்ற வகையில் அமைதியும், சாந்தமும், நிதானமும், பொறுமையும் பேண வேண்டும் என்பதனை எமக்கு யாரும் கூறத் தேவையில்லை ஆனால் இவற்றை மட்டுமே பேணி எமது உரிமைகளும் எமது பொறுப்புக்களும் தார்மீக அந்தஸ்தும் புதைக்கப்படும் நிலை ஏற்படுமாயிருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் ஐயப்ப தாஸக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ந)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

அறிவித்தல்

பட்டச் சான்றிதழ் வழங்கல்

30.11.2001 நடைபெற விருந்த பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் 28.01.2002 திங்கட்கிழமை மு. ப. 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

பதிவாளர்

(C/3161)


### நோர்வேயின்...

அன்ரன் பாலசிங்கத்துடன் மீண்டும் பேச வுள்ளது.

**தூதுக்குழுவின் பிரதிநிதிகள்**

சமாதான பேச்சுவார்த் தையில் கலந்துகொள்ளவுள்ள நோர்வேயின் தூதுக் குழுவில் கடந்த காலங்களில் சமாதானத் தூதுவராக செயற்பட்ட எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரி செல்வி ஹேர்ஸ்டி டொங்ஸ்ரார் ஆகியோரும் அங்கம் வகிக்கின் றனர்.

தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியல் ஆலோசகர் காலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் இத் தூதுக் குழுவினர் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து. சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் குறித்தும் பேச்சு நடத்த வுள்ளனர்.

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுநடத்தும் தூதுக்குழுவினர் அடுத்தவாரம் கொழும்பு வரவுள்ளனர். கொழும்பு வரும்தூதுக்குழு அங்கு அரச பிரதிநிதிகளை சந்தித்து விட்டு அதற்குப்பின்னர் வன்னி சென்று விடுதலைப்புலிகளின் உயர் மட்ட தலைவர்களுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வுள்ளனர். (வ)

### சந்தேக நபர்கள்..

என்று அப்பகுதி கிராம சேவையாளர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்தே நீதிவான் இ.த.விக்னராஜா மேற்படி உத்தரவை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் நடந்த தினத்தில் இருந்து நேற்றுவரை அவர்கள் குடாநாட்டை விட்டு வெளியில் சென்றிருந்தால் அது தொடர்பான அறிக்கையொன்றை இம்மாதம் 16ம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு சிவில், ஹெலிரூர்ஸ், மற்றும் இராணுவ அதிகாரிகளிடமும் நீதிபதி கேட்டுள்ளார்.

இதேவேளை 3வது சந்தேக நபரான ஜீவனை இம்மாதம் 16ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

### நோர்வே...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிக்கு விடுதலைப்புலிகள் பச்சைக்கொடி காட்டியுள்ளனரென்று நேற்று வலம்புரி தனது செய்தியில் பிரதான தலைப்புச் செய்தியாக செய்தி வெளியிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### நாடு..

விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு எந்த வகையில் தீர்வை எட்ட முடியுமோ அந்தவகையில் சமாதானத் தீர்வை காண்பேன் என்றும் அவர் உறுதிபடக் கூறினார். (வ)

### மண்ணெய்..

இதனைத்தொடர்ந்து யாழ் நகரில் உள்ள மாக்பெட் எரி பொருள் விற்பனை நிலையத் தில் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில்நின்று மண்ணெண்ணை பெற்றுச்சென்றதைக் காண முடிந்தது.

இதேவேளை ஒரு லீற்றர் 60ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணை நேற்று திடீரென ஒரு லீற்றர் 40ரூபாவுக்கு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### வன்னிக்கான...

*. உத்தரவுப்பத்திரம் பெறாத ஆயுதங்கள்
*. வெடிபொருட்கள்
*. ஆயுதங்கள்
*. முட்கம்பிகள்
*. பென்டோச் பற்றறிகள்

வன்னிக்கான முழுமையான பொருளாதர தடைநீக்கத் துக்குப் பதிலாக அரசாங்கம் நல்லெண்ண நடவடிக்கையாக ஒருசிலகுறிப்பிட்ட பொருட்க ளுக்கே தடையை நீக்கியுள் ளது.

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்குக

(கொழும்பு)

2002 - 2003 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்பலைக்கழக மானிய ஆணைக்குழு கோரியுள்ளது.

2001 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் தகுந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்களிடமிருந்து இவ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பபடிவம் அடங்கிய கையேடுகளை நாளை தொடக்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடமிருந்தும் மற்றும் தனியார் விநியோகப் பிரதிநிதிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-4)

இந் நிலைமை ஐக்கிய தேசிய முன்னணி அரசின் [illegible]பிக்கையற்ற தன்மையைக் கா[illegible]வதாகவும், புலிகளின் பிரதேசத்துக்கு பொருட்கள் எல்லாவற்றையும் அனுப்பக் கூடாதென்பதில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குள் பாரிய அழுத்தம் கொடுக்கப் பட்டதை வெளிப்படுத்துவதா கவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை வன்னிப் பகுதிக்கு அரசாங்கம் முழுமையாக பொருளாதாரத் தடையை நீக்கமாட்டாதெனவும், அதில் பாரபட்சம் காட்டப்படுவதுடன் ஒருசில வகையான பொருட்களுக்கே முதலில் தடைநீக்கப்படும் எனவும் நேற்று வலம்புரி செய்தி வெளியிட்டமை வாசகர்களுக்குத் தெரிந்ததே. (இ)

# யாழ் மாவட்ட கிரிக்கெற் சங்கத்தின் கூட்டங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கிறிக்கெற் சங்கம் எதிர்வரும் 15ம்திகதி வரை செயற்குழுக் கூட்டம், பொதுச் சபைக்கூட்டம், மற்றும் விசேட பொதுக்கூட்டம் ஆகியவற்றை நடத்தக்கூடாதென யாழ்மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

சங்கத்தின் உபசெயலாளரை இரண்டு வருடங்களுக்கு பொதுக் கூட்டங்களுக்கு சமூக மளிக்க அனுமதிப்பதில்லை என சங்கம் தீர்மானம் நிறை வேற்றியது.

இதனால் உபசெயலாளர் சங்கத்துக்கு எதிராக மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

மனுவை பரிசீலனை செய்த நீதிமன்றம் சங்கம் கூட்டம் கூடுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்து தீர்ப்பளித்துள்ளது. (இ)

# க.பெ.த.(சா) பரீட்சைவிடைத்தாள் திருத்தும் பணி 11ந் திகதி ஆரம்பம்.

க.பொ.த.சாதாரண பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணி இம்மாதம் 11ந்திகதி ஆரம்பமாகின்றன.

96நிலையங்களில் இப்பணிகள் மேற் கொள்ளப்படுமெனவும் இவை மேற்கொள்ளப்படும் காலப் பகுதியில் குறித்த பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஏப்பிரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 15ம் திகதி வரை மாணவர்கள் விண்ணப்பிக்க முடியுமெனவும்பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ந.4)


யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

பாண் விற்பனை தொடர்பான கலந்துரையாடல்

பாண் விற்பனை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சகல அங்கத்தவர்களும் நாளை (04.01.2002) வெள்ளிக்கிழமை 11.00 மணிக்கு தலைமைச் சங்கத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்,
யா. மா. பே. உ. சங்கம்.

(C/3159)


## மரண அறிவித்தல்

திருமதி

**கந்தசாமி சின்னத்தங்கச்சி**

பலாலி கிழக்கு வயாவிளானைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சின்னத்தங்கச்சி நேற்று (02.01.2002) அதிகாலை காலமானார். அன்னார் கந்தசாமியின் அன்புத் துணைவியும், மகாராசா, மனோகரராசா (செய்தியாளர், வலம்புரி) மனோரஞ்சிதராணி, மனோரஞ்சிதராசா, விஜயராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் ராதா, மிதுஷா ஆகியோரின் அன்பு மாமியும் பொன்னு, செல்லத்துரை, இரத்தினசிங்கம், நல்லதம்பி கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் பொன்னுத்துரை பரமேஸ்வரி, முத்துத்தம்பி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் அச்சுவேலி சீத்தாங்குளம் மயானத்தில் மாலை 4.30 மணியளவில் தீயில் சங்கமமானது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:-
க. மகாராசா
க. மனோரஞ்சிதராசா
(மகன்மார்)

(C/3162)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.